DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM

**CC.No.81/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW1 | Caste | : | |
| Name | : | ஜான்சன் | Age | : | 54 |
| F/N. | : | திவ்யநாதன் | Occupation | : | வனக்காப்பாளர், மண்டபம் |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 1st day of June 2022.

01.06.2022.

முதல் விசாரணை:-

நான் தற்போது மண்டபம் வனச்சரக அலுவலகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்திலும் மண்டபம் வனச்சரக அலுவலகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்தேன். கடந்த 18.10.2019 ம் தேதி வனச்சரகர் திரு.வெங்கடேஷ் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி காலை சுமார் 11.30 மணியளவில் புலித்தேவன் நகர் கடற்கரை மாரியம்மன் கோவில் அருகில் மூன்று பேர் கேனுடன் நின்று கொண்டிருந்தார்கள். எங்களை பார்த்தவுடன் தப்பித்துச் செல்ல முயற்சித்தார்கள். மூன்று கேன்களில் அரசால் தடைசெய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் இருந்தது. வனச்சரகர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். அந்த இடத்திலேயே வைத்து H நமூனா என்னால் தயார் செய்யப்பட்டது. கைப்பற்றிய கடல் அட்டைகளை எடைபோட்டு பார்த்தபோது சுமார் 120 கிலோ இருந்தது. நீதிமன்ற நடுவர் முன்னிலையில் 120 கிலோ கடல் அட்டைகளை மண்டபத்தில் வைத்து அழித்து விட்டோம். பின்பு மூன்று நபர்களையும் கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினோம்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

நான் இராமேஸ்வரம் பகுதியில் 3 வருடங்களாக வேலை செய்து வருகிறேன். இராமேஸ்வரத்திலுள்ள கடற்கரை பகுதிகள் எல்லாம் எனக்கு தெரியும். ரோந்து பணிக்கு நான் முன்பே பைக்கில் சென்றுவிட்டேன். அதன்பின்பு தான் ரேஞ்சர் இரகசிய தகவல் கிடைத்து அவரது வாகனத்தில் வந்தார். அப்போது என்னுடன் ரோந்து பணியில் யார் எல்லாம் இருந்தார்கள் என்றால் நானும், ஆனந்தன் என்பவர் மட்டும் இருந்தோம். நான் இராமேஸ்வரம் கடற்கரையில் எந்த இடத்தில் இருக்கும்போது ரேஞ்சர் தகவல் கிடைத்து வந்தார் என்றால் சேராங்கோட்டை கடற்கரையில் நானும், ஆனந்தனும் இருக்கும்போது வந்தார். ரேஞ்சர் சேராங்கோட்டை கடற்கரைக்கே வந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் சேராங்கோட்டை கடற்கரைக்கு வரும்போது மணி என்ன இருக்கும் என்றால் காலை 11.00 மணி இருக்கும். சேராங்கோட்டை கடற்கரை பகுதியில் நான் மற்றும் ரேஞ்சர் ஆகியோர்

ரோந்துக்கு நடந்துதான் சென்றோம். சேராங்கோட்டை கடற்கரையிலிருந்து புலித்தேவன் மாரியம்மன் கோவில் தெரு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் 1/2 கிலோ மீட்டர் இருக்கும். அன்றைய தினம் நாங்கள் சேராங்கோட்டை கடற்கரையில் நடந்து வந்தீர்களா என்றால் கடற்கரையை ஒட்டியும், கருவைக்குள்ளும் சுற்றி பார்த்து கொண்டிருந்தோம். பார்த்து சுற்றி வருவதற்கு எவ்வளவு நேரம் ஏற்பட்டது என்றால் 10 நிமிடம் ஆனது. கடற்கரை மாரியம்மன் கோவிலில் எதிரிகளை நாங்கள் பார்க்கும்போது மணி என்ன இருக்கும் என்றால் 11.20 முதல் 11.25 மணி இருக்கும். எங்களை பார்த்தவுடன் எதிரிகள் ஓடினார்களா என்றால் ஓடினார்கள். எவ்வளவு தூரம் ஓடினார்கள் என்றால் 50 மீ தூரம் ஓடி இருப்பார்கள். எதிரிகள் 1 முதல் 3 பேரையும் நான்தான் பிடித்தேனா என்றால் நான், ரேஞ்சர், ஆனந்தன் மூன்று பேரும் சேர்ந்த பிடித்தோம். நான் குறிப்பாக யாரை பிடித்தேன் என்றால் முருகேசனையும், முருகையாவையும் பிடித்தேன். ஆனந்தன் சக்திவேலைய பிடித்தார். ரேஞ்சர் வெங்கேடஷ் யாரையும் பிடிக்கவில்லை. நான் ஓடி பிடிப்பதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் 10 நிமிடம் ஆனது. எதிரிகளை பிடித்த இடத்திற்கும், ரேஞ்சர் வெங்கடேசன் நின்ற இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 20 மீ தூரம் இருக்கும். நாங்கள் எதிரிகளை பிடித்தவுடன் நேராக ரேஞ்சரிடம் தான் கொண்டு சென்றோம். எதிரிகளை நடந்தே சேராங்கோட்டை கடற்கரைக்கு, மாரியம்மன் கோவில் தெருவில் இருந்து கூட்டிச் சென்றோம். அப்படியே நடந்து கூட்டி செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் 1/2 மணி நேரம் ஆனது. H நமூனாவனது சேராங்கோட்டை கடற்கரையில் வைத்து தயார் செய்யப்பட்டது. H நமூனா படிவம் அனைத்தும் நான் தான் வைத்திருந்தேன். நான் H நமூனா படிவம் தவிர வேறு ஏதாவது வைத்திருந்தேனா என்றால் வெள்ளை பேப்பர் வைத்திருந்தேன். வேறு எதுவும் வைத்திருக்கவில்லை. H நமூனா படிவம் தயார் செய்த பின்பு தான் சேராங்கோட்டை கடற்கரை சென்று பின்பு தான் மண்டபத்திற்கு வந்தோம். 3 பேரிடமிருந்து பிடித்ததாக சொல்லப்படும் கேன்களை யார் தூக்கி வந்தார்கள் என்றால் அவர்களேதான் தூக்கி வந்தார்கள். நாங்கள் சேராங்கோட்டை கடற்கரையில் இருந்து மண்டபத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 12.00 முதல் 12.30 மணிக்குள் போய் விட்டோம். சேராங்கோட்டை கடற்கரையிலிருந்து மண்டபத்தில் உள்ள எங்களது வன அலுவலகமானது 25 கிலோ மீட்டருக்கு மேல் என்றால் சரிதான். வனச்சரக ஜீப்பில் போனால் குறைந்தது 35 நிமிடத்திலிருந்து 40 நிமிடம் பிடிக்கும் என்றால் சரிதான். மண்டபத்தில் உள்ள வன அலுவலகத்தில் வைத்துதான் கேன்களில் இருந்ததை எடை போட்டு பார்த்தோம். ஆஜர் 1, 2 எதிரிகள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகாத 3 வது எதிரி ஆகியோர் தனித்தனியாக வைத்திருந்த கேன்களில் எவ்வளவு இருந்தது என தனித்தனியாக எடை போட்டு பார்க்கவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு எதிரியிடமிருந்து என்ன பொருள் வைத்துள்ளார்களோ அதை தனித்தனியாகத்தான் எடைபோட்டு பார்க்க வேண்டும் என்றால் சரிதான். புலித்தேவன் நகர் ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். அந்த தென்வடல் ரோடு முடியும் இடத்தில் பெரிய மணல் மேடு உள்ளது என்றால் சரிதான். அந்த புலித்தேவன் நகரிலிருந்து கடற்கரை நோக்கி செல்லும் தென்வடல் ரோடு எவ்வளவு தூரம் என்றால் 1 கி.மீ. அந்த தென்வடல் ரோட்டிற்கு கிழக்கு பக்கம்தான் மாரியம்மன் கோவில் தெரு. வழக்கு சம்பவமானது புலித்தேவன் நகரில் எதுவும்

நடைபெறவில்லை. மாரியம்மன் கோவில் தெருவில் தான் நடைபெற்றது. எடை போட்ட பின்பு தான் அதன் விபரங்களை அ.சா.ஆ.6 H நமூனாவில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். H நமூனா படிவத்தில் ஒரு பகுதியானது சம்பவ இடமான மாரியம்மன் கோவில் கடற்கரையிலும் எழுதப்பட்டு, மற்ற விபரங்கள் கடல் அட்டையின் எடை மண்டபத்தில் உள்ள எங்களது அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.6 H நமூனா படிவம் எங்கு வைத்து தயார் செய்து எழுதப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.ஆ.6 H நமூனா படிவம் மாரியம்மன் கோவில் தெருவில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றாலும், எதிரிகளிடமிருந்து எந்தவொரு பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், அனைத்தும் எங்கள் அலுவலகமான மண்டபத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.6 H நமூனா படிவத்தில் கடல் அட்டையின் எடையானது எங்கள் அலுவலகம் உள்ள மண்டபத்தில் வைத்து எடை பார்த்து எழுதப்பட்டது என அதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.6 H நமூனா படிவம் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்ற விபரமும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.6 H நமூனா படிவத்தில் எனது கையெழுத்து உள்ளதா என்றால் உள்ளது. அ.சா.ஆ.6 H நமூனா படிவத்தில் மூன்று கேன்களில் தனித்தனியாக எடை எவ்வளவு இருந்தது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.6 H நமூனா படிவத்தில் அலுவலக முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் மாரியம்மன் கோவில் தெருவில் வைத்து எதிரிகளை பிடித்ததாக நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முருகேசன், முருகையா கொடுத்த ஒப்புதல்வாக்குமூலம் ஒரு கையெழுத்திலும், சக்திவேல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் வேறு கையெழுத்திலும் உள்ளது என்றால் சரிதான். நான் எழுதிய ஒப்புதல் வாக்குமூலத்தில் மாரியம்மன் கோவில் தெருவில் வைத்து எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாகவும், பிடிபொருட்கள் பிடித்ததாகவும் எழுதினீர்களா என்றால் இல்லை. நான் தயார் செய்த இரு ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் சம்பவ இடத்தில் தயார் செய்யவில்லை, பின்னிட்டு எங்கள் அலுவலகத்தில் வைத்து தயார் செய்தது என்றால் சரியல்ல. கடல் அட்டை இராமேஸ்வரம் கடற்கரை மற்றும் மற்ற கடற்கரை பகுதிகளில் கிடைக்கக்கூடிய ஒன்று என்றால் சரிதான். நாங்கள் பிடித்தாக சொல்லப்படும் கேன்கள் பஜாரில் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். பிடிபொருள் மற்றும் கேன்கள் வழக்கிற்காக பின்னிட்டு எங்களால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரேஞ்சர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.